நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மயிலாடுதுறை
முன்னிலை : திரு. M. ராஜேஷ்கண்ணா M.A., LL.M.,
நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.
2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் ஐப்பசி திங்கள் 11 ஆம் நாள்
2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 28-ம் நாள் செவ்வாய்கிழமை
*******

**Crlmp. No.2473/2025**
in
**CC.No. 238/2024**

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
பாலையூர் காவல் நிலையம்,
குற்ற எண். 166/2024,
U/s. 191(2), 191(3), 296(b), 118(1), 351(3), 118(2) of BNS ..... மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

| | | |
|---|---|---|
| 1. | மோகன், வயது -51/2024,<br>த/பெ. மாயாண்டி<br>மாதா கோவில் தெரு,<br>வைகல்,<br>மேலையூர் போஸ்ட்,<br>குத்தாலம் தாலுக்கா. | |
| 2. | அறிவரசன், வயது - 51/2024,<br>த/பெ. மாரிமுத்து,<br>மாதா கோவில் தெரு,<br>வைகல்,<br>மேலையூர் போஸ்ட்,<br>குத்தாலம் தாலுக்கா. | |
| 3. | அறிவழகன், வயது - 49/2024,<br>த/பெ. சுந்தரம்,<br>கிழத்தெரு,<br>வைகல்,<br>மேலையூர் போஸ்ட்,<br>குத்தாலம் தாலுக்கா. | |
| 4. | சேரன், வயது - 30/2024,<br>த/பெ. சேகர்,<br>மாதா கோவில் தெரு,<br>வைகல்,<br>மேலையூர் போஸ்ட்,<br>குத்தாலம் தாலுக்கா. | |

| | | |
|---|---|---|
| 5. | அசோக், வயது – 35/2024,<br>த/பெ. செல்வராஜ்,<br>மாதா கோவில் தெரு,<br>வைகல்,<br>மேலையூர் போஸ்ட்,<br>குத்தாலம் தாலுக்கா. | |
| 6. | ரன்ஜித், வயது – 23/2024,<br>த/பெ. ராஜேந்திரன்,<br>தோப்பு தெரு,<br>வைகல்,<br>மேலையூர் போஸ்ட்,<br>குத்தாலம் தாலுக்கா. | ..... எதிரிகள் |

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 06.10.2025ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V.S. பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**// உத்தரவு //**

இவ்வழக்கின் எதிரிகள் பிரிவு 109 BNSS பிரிவின் கீழான குற்றம் புரிந்துள்ளதாக வழக்காவணங்களின் அடிப்படையில் தெரியவருவதாலும், மேற்படி பிரிவானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இவ்வழக்கை பிரிவு 362 BNSS ன் கீழ் அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றும்படியும் தாழ்மையுடன் அரசுத்தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுவின் சுருக்கம் :–</u>**

இவ்வழக்கானது எதிரிகளுக்கு எதிராக பாலையூர் காவல் நிலைய குற்ற எண்.166/2024 பா.நி.ச பிரிவுகள் 191(2), 191(3), 296(b), 118(1), 351(3), 118(2) of BNS ன் கீழ், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, CC.No. 238/2024 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 15.09.2025 அன்று விசாரணைக்காக போடப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கின் சாட்சிகளை எதிரிகள் "**செத்துப் போங்கடா**" என்று மிரட்டிக்கொண்டு தாக்கியதில், பட்டியல் சாட்சிகள் 1,2 உட்பட மேலும், விஜய், சந்தோஷ், சுபாஷ், விக்னேஷ்

ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகவும், LW2 விஜயா மற்றும் விக்னேஷ்க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதாகவும், மேற்படி 4 நபர்களும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான காயச்சான்றுகள் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்,

எதிரிகளின் இத்தகைய செயலுக்கு உண்டான பா.நி.ச. பிரிவு 109ன் கீழ் அரசு தரப்பில் இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், எதிரிகளின் குற்றசெயல்கள் மரணம் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டதால் LW2 விஜயா மற்றும் விக்னேஷ்க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதாகவும்,

ஆகவே, எதிரிகள் பிரிவு 109 BNSS பிரிவின் கீழான குற்றம் புரிந்துள்ளதாலும், மேற்படி பிரிவானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இவ்வழக்கை பிரிவு 362 BNSSன் கீழ் அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடக்கோரி அரசுத்தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u> :-**

மேற்படி, வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.1ன் BNSS பிரிவு 180(3)ன் கீழான வாக்குமூலத்தில் எதிரிகள் "**செத்துப் போங்கடா**" என்று சொல்லி தன்னையும், மற்றவர்களையும் அடித்துவிட்டு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டதாக மட்டுமே தெரிவித்துள்ளதாகவும், அதனையொட்டிய மருத்துவரின் விசாரணையின்போது இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக மட்டுமே தெரிவித்துள்ளதாகவும், மேலும் மேற்படி வழக்கில் மேற்படி சாட்சிகள் சம்பவம் குறித்தும், தாங்கள் எதிரிகளால் தாக்கப்பட்ட ஆயுதங்கள் குறித்தும் நீதிமன்றத்தின் முன்பாக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் காவல்துறையினர் தயார் செய்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் குற்றச்சாட்டை மாற்றம் செய்து விசாரணைக்காக அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கக்கோரி அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு நிலைநிற்கத்தக்கதல்ல.

மேலும், சம்பவத்தால் காயமுற்ற சாட்சிகள் நீதிமன்றத்தின் முன்பாக சம்பவம், தங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் எதிரிகள் தாக்கிய ஆயுதங்கள் போன்ற விபரங்களை சாட்சிகளின் சாட்சியத்திலிருந்துதான் தெளிவாக தெரிந்துகொண்டு அதனடிப்படையில் வழக்கின் குற்றத்தை மாற்றியமைக்கலாம் என்கிற நிலையில், தற்சமயம் அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்கும் முன்னரே காவல்துறையினர் தயார் செய்து தாக்கல் செய்துள்ள சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகளின் மீதான குற்றத்தை

மாற்றியமைக்கக்கோருவது சட்ட விதிகளுக்கு முரணாகும். எனவே, மேற்படி வழக்கில் குற்றத்திற்கான சட்டப்பிரிவுகளை மாற்றி விசாரணைக்காக அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**4. மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய அம்சமாகும்.**

**<u>5. தீர்வு :–</u>**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் ஆட்சேபனை பரிசீலனை செய்யப்பட்டது.

இவ்வழக்கின் சாட்சிகளை எதிரிகள் "**செத்துப் போங்கடா**" என்று மிரட்டிக்கொண்டு தாக்கியதில் பட்டியல் சாட்சிகள் 1,2 உட்பட மேலும், விஜய், சந்தோஷ், சுபாஷ், விக்னேஷ் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாகவும், LW2 விஜயா மற்றும் விக்னேஷ்க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதாகவும், எதிரிகளின் இத்தகைய செயலுக்கு உண்டான பா.நி.ச. பிரிவு 109 ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், எதிரிகளின் குற்றச்செயல்கள் மரணம் ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டதால் LW2 விஜயா மற்றும் விக்னேஷ்க்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரிகள் பிரிவு 109 BNSS பிரிவின் கீழான குற்றம் புரிந்துள்ளதாலும், மேற்படி பிரிவானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் இவ்வழக்கை பிரிவு 362 BNSS ன் கீழ் அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்ற உத்தரவிடக்கோரி அரசுத்தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மாறாக, எதிரிகள் தரப்பில் அ.சா.1 ன் வாக்குமூலத்தில் எதிரிகள் "**செத்துப்போங்கடா**" என்று சொல்லி தன்னையும், மற்றவர்களையும் அடித்துவிட்டு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டதாக மட்டுமே தெரிவித்துள்ளதாகவும், அதனையொட்டிய மருத்துவரின் விசாரணையின்போது இரும்பு கம்பியால் தாக்கப்பட்டதாக மட்டுமே தெரிவித்துள்ளதாகவும், மேலும் இவ்வழக்கில் சாட்சிகள் சம்பவம் குறித்தும், தங்களுக்கு ஏற்பட்ட காயம் குறித்தும், எதிரிகளால் தாக்கப்பட்ட ஆயுதங்கள் குறித்தும், நீதிமன்றத்தின் முன்பாக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் காவல்துறையினர் தயார் செய்த வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் குற்றச்சாட்டை மாற்றம் செய்து விசாரணைக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கக்கோரி அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**7.** ஆவணங்களை பரிசீலனை செய்ததில், பட்டியல் சாட்சியான புகார்தாரர் தனது புகார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரணையிலும் எதிரிகள் தங்களை அருவாள் மற்றும் இரும்பு கம்பி, இரும்புபாறை போன்ற கடுமையான ஆயுதங்களால் **"நீங்கள் இதோட செத்துப்போங்கடா"** என்று சொல்லி தங்களை சரமாறியாக அடித்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

**8.** பட்டியல் சாட்சி–2ம், காயமுற்ற நபருமான திருமதி. விஜயா தனது போலிசார் விசாரணையில் எதிரிகள் தங்களை அருவாள் மற்றும் இரும்பு கம்பி, இரும்புபாறை போன்ற கடுமையான ஆயுதங்களால் **"நீங்கள் இதோட செத்துப்போங்கடா"** என்று சொல்லி தங்களை சரமாறியாக அடித்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

**9.** மேலும், காயம்பட்ட நபர்களை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை செய்த கும்பகோணம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை உதவி மருத்துவரான டாக்டர். திரு. கார்த்திக்கேயன் தனது போலிசார் விசாரணையில் கடந்த 28.09.2024 அன்று மாலை தான் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது குத்தாலம் தாலுக்கா, வைகல் மாதா கோவில் தெருவில் வசிக்கும் 1. விக்னேஷ், 2. சந்தோஷ், 3. சுபாஷ், 4. விஜயா, 5. மருதன் ஆகியோர் அன்றைய தினம் மாலை 04.00 மணிக்கு அடையாளம் தெரிந்த நபர்கள் வைகலில் வைத்து இரும்பு ராடால் தாக்கியதாக கூறி காயங்களுடன் வரப்பட்டவர்களை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை செய்ததாகவும், விக்னேஷ் மற்றும் சந்தோஷ் ஆகிய இருவரையும் மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்ததாகவும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

**10.** பட்டியல் சாட்சியான விஜயா மற்றும் காயம்பட்ட நபரான விக்னேஷ் ஆகிய இருவருக்கும் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் எனவும், பட்டியல் சாட்சியான அமிர்தலிங்கம், காயம்பட்ட நபர்களான விஜய், சுபாஷ் ஆகியோருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் எனவும், அவர் அவரது விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்தே, எதிரிகளுக்கு எதிராக BNS பிரிவு 109(1)ன் கீழ் கொலை முயற்சிக்கான, குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது தெளிவாகிறது.

**11.** சாட்சிகளை விசாரணை செய்து சாட்சிகளின் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே இவ்வழக்கினை பிரிவு 362 BNSS ன்கீழ் மேல்விசாரணைக்கு அனுப்ப முடியும் என்ற எதிரிகள் தரப்பு வாதம் ஏற்கத்தக்கதாக இல்லை. இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான விஜய், சந்தோஷ், சுபாஷ், விக்னேஷ் ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. அதுகுறித்து அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை. இவ்வழக்கை பொறுத்தவரையில் காயம்பட்ட நபர்களான விஜய், சந்தோஷ், சுபாஷ், விக்னேஷ் ஆகியோர்களை சாட்சியாக விசாரிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமான ஒன்றாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, காயம்பட்ட நபர்களான விஜய், சந்தோஷ், சுபாஷ், விக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து உரிய சட்டப்பிரிவின் கீழ் BNSS பிரிவு 193(9) ன்படி கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய அரசு தரப்பிற்கு உத்தரவிடப்படுகிறது.

**13. i) இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

**ii) பாலையூர் காவல் நிலைய ஆய்வாளர் எதிர்வரும் 25.11.2025 ம் தேதிக்குள் காயம்பட்ட நபர்களான விஜய், சந்தோஷ், சுபாஷ், விக்னேஷ் ஆகியோர்களை விசாரித்து BNSS பிரிவு 180(3)ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்து உரிய சட்டப்பிரிவின் கீழ் BNSS பிரிவு 193(9)ன்படி கூடுதல் இறுதியறிக்கை தாக்கல் செய்ய அரசு தரப்பிற்கு உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 28–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்). M. ராஜேஷ்கண்ணா,
நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.

**<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** – இல்லை –

(ஒம்). M. ராஜேஷ்கண்ணா,
நீதித்துறை நடுவர் எண்.2
மயிலாடுதுறை.